بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹு¯ல்லாஹு¯த் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 23/06/2023 அன்று U.K. - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜு¯முஆ பேருரையின் சுருக்கம்**

# பத்ர் யுத்தத்திற்கான ஆயத்தங்களின் நிலைமைகள், சம்பவங்கள் மற்றும் கண்ணியத்திற்குரிய சஹாபா பெருமக்கள் தம் எஜமானரும், தாம் பின்பற்றுவதற்கு உரியவருமான ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு உள்ளத்தின் ஆழத்திலிருந்து கீழ்ப்படிதல் பற்றிய ஈமானுக்கு வலுவூட்டும் குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۱ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝۲ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۳ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝۴ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝۵

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝۶ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝۷

கடந்த குத்பாவில் எடுத்துரைக்கப்பட்டது போன்று, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அனுப்பிய செய்தி தெரிவிப்பவர்கள், 'குறைஷிகளின் படை வியாபாரக் குழுவைக் காப்பாற்றுவதற்காக முன்னோக்கி வந்து கொண்டிருக்கிறது' என்ற தகவலைத் தெரிவித்தார்கள். அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சூழ்நிலையைப் பற்றி சஹாபா பெருமக்களுக்குத் தெரியப்படுத்தி ஆலோசனை கேட்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆகியோருக்குப் பிறகு, ஹஸ்ரத் மிக்தாத் பின் அம்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ''நாங்கள், இஸ்ரவேலர்கள் மூஸாவிடம் கூறியது போன்று,

'فَاذۡہَبۡ اَنۡتَ وَ رَبُّکَ فَقَاتِلَاۤ اِنَّا ہٰہُنَا قٰعِدُوۡنَ

அதாவது, நீரும் உம் இறைவனும் சென்று போரிடுங்கள். நாங்கள் இங்கயே உட்கார்ந்திருப்போம்' என்று பதில் அளிக்க மாட்டோம்.

மாறாக, தாங்கள் என்ன முடிவெடுத்தாலும் நாங்கள் தங்களுடன் இருக்கிறோம். தங்களுடன் இணைந்து தங்களுக்குத் தோழமையாக எதிரியுடன் போர் புரிவோம். தங்களை உண்மையுடன் அனுப்பிய(அந்த இறை)வன் மீது ஆணையாக! தாங்கள் எங்களை 'பர்குல் ஃகிமாத்' வரை அழைத்துச் சென்றாலும் நாங்கள் தங்களுடன் செல்வோம்.''

இதைக் கேட்ட ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு நற்சொற்களைக் கூறி அவர்களுக்காக துஆ செய்தார்கள்.

ஓர் எழுத்தாளர் இவ்வாறு எழுதியுள்ளார்: 'பர்குல் ஃகிமாத்' என்பது மக்காவின் தெற்கு திசையில், ஏறத்தாழ 430 கி.மீ தொலைவில், பொதுவான நெடுஞ்சாலையைவிட்டு விலகிஅமைந்துள்ள ஒரு தொலை தூரப் பகுதியாகும். அது மொழிவழக்கில், பயணத் தொலைவுக்காவும், (பயண) சிரமத்திற்காகவும் கூறப்படுகிறது. இதன் பொருள், எவ்வளவு தூரம் வரை வேண்டுமானாலும் தாங்கள் செல்லுங்கள். நாங்கள் தங்களுடன் இருப்போம் என்பதாகும்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் மிக்தாத் (ரலி) அவர்கள் ஆகிய மூவரும் முஹாஜிர்களைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். எனவே, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அன்ஸாரிகளின் ஆலோசனையைக் கேட்க விரும்பினார்கள்.

ஹஸ்ரத் சஃது பின் முஆஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: "நாங்கள் தங்கள் மீது ஈமான் கொண்டுள்ளோம். தங்களது மார்க்கத்திற்குச் சான்று பகர்ந்துள்ளோம். நாங்கள் தங்களுடைய கட்டளையை செவிமடுத்தோம். அதை நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்துள்ளோம். எனவே, தாங்கள் எங்களை எங்கு அழைத்துச் சென்றாலும் நாங்கள் செல்லத் தயாராக உள்ளோம். எனவே, அல்லாஹ்வின் அருளால் தாங்கள் எங்களுடன் புறப்படுங்கள்."

எவ்வாறாயினும், ஹஸ்ரத் சஃது (ரலி) அவர்கள் கூறிய இந்த விஷயத்தைக் கேட்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்கள். மேலும், "அல்லாஹ் எனக்கு இரண்டு பிரிவுகளில் (சிரியாவின் வியாபாரக் குழு அல்லது மக்கத்து காஃபிர்களின் போர்ப்படை ஆகியவற்றில்) ஒன்றின் மீது வெற்றியை வழங்குவதாக வாக்குறுதி அளித்துள்ளான். நான் எதிரிகளின் ஆட்கள் கொலையுண்டு விழும் அந்த இடத்தைப் பார்க்கிறேன்" என்று கூறினார்கள்.

சஹாபிகள், 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! குறைஷிய படையைப் பற்றி தங்களுக்கு முன்னரே தெரிந்திருந்தது என்றால், 'போர் ஏற்படுவதற்கான சாத்தியம் குறித்து தாங்கள் மதீனாவிலேயே ஏன் எங்களிடம் கூறிவிடவில்லை? நாங்கள் ஏதாவது ஆயத்தம் மேற்கொண்டு புறப்பட்டிருப்போமே!' என்று கேட்டார்கள்.....

ஆனால், இந்தத் தகவல், ஆலோசனை மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தரப்பிலிருந்து, 'இவ்விரு பிரிவுகளில் ஏதாவது ஒன்றின் மீது கண்டிப்பாக முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைக்கும்' என்ற இறை நற்செய்தி ஆகிய அனைத்தும் இருந்தும்கூட, அதுவரை முஸ்லிம்களுக்கு அவர்கள் எந்தப் பிரிவை எதிர்த்துப் போரிடப் போகிறார்கள் என்பது சரியாகத் தெரிந்திருக்கவில்லை. அவர்கள் இந்த இரு பிரிவுகளில் ஏதாவதொரு பிரிவோடு போர் மூள்வதற்கான சாத்தியமுள்ளதாகக் கருதி வந்தார்கள். இயல்பாக, பலவீனமான குழுவோடு, அதாவது, வியாபாரக் குழுவோடு போரிடுவதை அதிகம் எதிர்பார்த்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூத் (ரலி) அவர்கள் இது குறித்து கூறுகிறார்கள்: பத்ர் யுத்தத்தின் போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அன்ஸாரிகளின் ஆலோசனையை எதிர்பார்த்தார்கள். அன்ஸாரிகள், 'போர் புரிபவர்கள் மக்கத்து மக்களாக இருக்கிறார்கள். நாம் ஏதாவது ஆலோசனை தந்தால், முஹாஜிர்கள், இவர்கள் நம் சகோதரர்களோடும் உறவினர்களோடும் போர் புரிய சொல்கிறார்கள் என்று நினைப்பார்களே' என்று யோசித்தார்கள்.

ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீண்டும் மீண்டும் கூறிய பிறகு, கடைசியில் அன்ஸாரிகள் தமது தயக்கத்தை வெளிப்படுத்திய பிறகு, 'நாங்கள் எந்நிலையிலும் தங்களுடன் இருப்போம்' என்று ஆலோசனை வழங்கினார்கள். அன்ஸாரிகளின் ஆலோசனைக்குப் பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு, பத்ர் மைதானத்துக்கு அருகில் இறங்கினார்கள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் புறப்பட்டார்கள். அவர்கள் ஓர் அரேபிய முதியவரிடம் சென்று நின்று விட்டார்கள். அவரிடம் குறைஷிகளைப் பற்றி கேட்டார்கள். அந்த வயோதிகர், 'முஹம்மது ((ஸல்) அவர்கள்) மற்றும் அவருடைய தோழர்கள் இன்ன நாளில் புறப்பட்டு விட்டார்கள் என்பது எனக்குத் தெரிய வந்தது. அது சரி என்றால், இப்போது அவர்கள் இன்ன இடத்தில் இருப்பார்கள்.

மேலும், குறைஷிகள் இன்ன நாளில் புறப்பட்டு விட்டார்கள் என்பதும் எனக்குத் தெரிய வந்தது. அது சரி என்றால், அவர்கள் இன்ன இடத்தில் இருப்பார்கள்' என்று கூறினார். 'நீங்கள் (இருவரும்) யார்?' என்று அந்த வயதானவர் கேட்டார். அதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மிகவும் நுட்பமான முறையில், 'நாங்கள் தண்ணீரிலிருந்து வருகிறோம்' என்று பதில் அளித்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பத்ர் மைதானத்தில் இருக்கும் நீரூற்றைப் பற்றி கூறியிருப்பதற்கு அதிக சாத்தியமுள்ளது. அல்லாஹ்வே நன்கறிவான்.

திரும்பி வந்த பிறகு, மாலை வேளையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஸுபைர் பின் அவ்வாம் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஸஃது பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் ஆகியோரை மற்ற சில சஹாபிகளுடன், எதிரிகளைப் பற்றி மேற்கொண்டு தகவல் சேகரித்து வருவதற்காக பத்ர் நீரூற்று பக்கம் அனுப்பி வைத்தார்கள். அவர்கள் இரண்டு பேரைப் பிடித்து வந்தார்கள். அவர்கள், 'குறைஷிகள் எங்களைத் தண்ணீர் எடுத்து வருவதற்கு அனுப்பினார்கள்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் விசாரித்த போது அவர்கள் (இருவரும்), 'பல குறைஷியர்கள் இந்த மலைக் குன்றுக்குப் பின்னால் இருக்கிறார்கள். அவர்கள் சில நாள் ஒன்பது ஒட்டகங்களையும் சில நாள் பத்து

ஒட்டகங்களையும் அறுக்கிறார்கள்’ என்று கூறினார்கள். இதைக் கேட்ட ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்த மக்கள் 950 க்கும் ஆயிரத்துக்கும் இடைப்பட்ட எண்ணிக்கையில் இருக்கிறார்கள் என்று கணித்தார்கள்.

பிறகு, அவர்கள் (இருவரும்) அந்தப் படையில் கலந்து கொண்டிருந்த பல குறைஷிய தலைவர்களின் பெயர்களைக் கூறினார்கள். அதைக் கேட்ட ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ‘மக்கா தன்னுடைய இதயத் துண்டுகளை உங்கள் முன்னால் போட்டு விட்டது’ என்று கூறினார்கள்.

இவை மிகவும் அறிவார்ந்த மற்றும் ஞானமிக்க சொற்கள் ஆகும். ஹுஸூர் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய நாவிலிருந்து இயல்பாக இந்தச் சொற்கள் வெளி வந்ததால், இறைவன் தங்களுக்கு நிச்சயமாக வெற்றியை வழங்குவான் என்று சஹாபாவின் உள்ளங்கள் உறுதியாகி விட்டன.

அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் ஹப்பாப் பின் முன்ஸிர் (ரலி) அவர்கள், ‘அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ((ஸல்)) தாங்கள் இறைக் கட்டளையால் இந்த இடத்தில் தங்குகிறீர்களா அல்லது இது தங்களின் யோசனையும், போர் உத்தியுமா?’ என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் போர் உத்திதான் என்று கூறினார்கள்.

அப்போது (ஹப்பாப்) அவர்கள், ‘இந்த இடம் உகந்ததல்ல. இதற்கு மாறாக, எதிரிகளின் தண்ணீருக்கு அருகில் உள்ள இடத்தில் தங்க வேண்டும். அனைத்து கிணறுகளையும் அடைத்து விட வேண்டும். நமக்காக ஒரு நீர்த்தேக்கத்தில் தண்ணீர் நிரப்பிக் கொள்ள வேண்டும். நாம் எதிரிகளோடு போரிடும் போது நமக்குத் தண்ணீர் கிடைத்து விடும். எதிரிக்குத் தண்ணீர் கிடைக்காமல் போய் விடும்’ என்று பணிவுடன் கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இந்த ஆலோசனை பிடித்து விட்டது. எதிரிகளுக்கு மிக அருகில் உள்ள கிணற்றுக்குப் பக்கத்தில் முகாமிட்டு மற்ற கிணறுகளைப் பயனளிக்காதவையாக ஆக்கி விட்டார்கள். நீர்த்தேக்கம் ஒன்றை உருவாக்கி அதைத் தண்ணீரால் நிரப்பி விட்டார்கள்.

ஹஸ்ரத் சஃது பின் முஆஸ் (ரலி) அவர்கள் அவ்ஸ் கோத்திரத்தின் தலைவரின் ஆலோசனையின் பேரில், மைதானத்தின் ஒரு பகுதியில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்காக ஒரு கூடாரத்தைத் தயாரித்தார்கள். மேலும், ஹுஸூர் (ஸல்) அவர்களின் பயண விலங்கையும் அங்கு கட்டி விட்டார்கள். அவர்கள், ‘தாங்கள் இங்கு தங்குங்கள். நாங்கள் போரிடுவோம். ஒருவேளை எங்களுக்குத் தோல்வி ஏற்பட்டால், தாங்கள் இந்தப் பயண விலங்கில் அமர்ந்து மதீனாவுக்குச் சென்று விடுங்கள். அங்கு எங்கள் சகோதரர்கள் தங்களைப் பாதுகாப்பார்கள்’ என்று பணிவுடன் கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ‘பத்ர் மைதானத்தை அடைந்ததும் சஹாபா தங்களுக்குள் ஆலோசனை செய்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை ஓர் உயரமான இடத்தில்

கூடாரத்தில் அமர வைத்து விட்டார்கள். அனைத்திலும் வேகமாக ஓடும் ஒட்டகத்தை அங்கு கட்டி வைத்து விட்டார்கள். மேலும், கூறினார்கள்:

“நாம் குறைவானர்களாக உள்ளோம். எதிரிகள் மிக அதிகமாக உள்ளனர். எங்களுக்கு எங்களுடைய மரணத்தைப் பற்றி எந்தக் கவலையும் இல்லை. எங்களுக்குத் தங்களைப் பற்றிய அக்கறை தான் உள்ளது. நாங்கள் மரணித்து விட்டால், இஸ்லாத்துக்கு எந்த இழப்பும் ஏற்படாது. ஆனால், தங்களுடன் இஸ்லாத்தின் வாழ்வு இணைந்திருக்கிறது. எனவே, நாங்கள் தங்களைப் பாதுகாப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வது அவசியம் ஆகும். இறைவன் நாடாது இருக்கட்டுமாக! ஒருவேளை நாங்கள் ஒவ்வொருவராக ஷஹீதாகி விட்டால், இந்த ஒட்டகத்தின் மீது பயணித்து, தாங்கள் மதீனாவுக்கு சென்று விடுங்கள். அங்கு எங்கள் சகோதரர்கள் தங்களைப் பாதுகாப்பார்கள்.”

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவர்கள் கூறியதை ஏற்கவுமில்லை; ஏற்றிருக்கவும் முடியாது. ஆனால், இது சஹாபா (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) உடைய ஓர் உணர்வாக இருந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: “ஒருமுறை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், ‘சஹாபாவில் எல்லாரையும் விட அதிகம் வீரமானவர், துணிச்சல் மிக்கவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆவார்கள்’ என்று கூறினார்கள்.”

பத்ர் யுத்தத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்காக ஒரு தனிக் கூடாரம் அமைக்கப்பட்ட போது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உடனடியாக உருவிய வாளை ஏந்திக் கொண்டு நின்று விட்டார்கள். அந்த ஆபத்தான சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பாதுகாக்கும் பணியை நிறைவேற்றினார்கள்.

காலை நேரத்தில் குறைஷிகள் முன்னேறி வந்தார்கள். அப்போது ஹுஸூர் (ஸல்) அவர்கள் இறைவனிடம் இவ்வாறு துஆ செய்தார்கள்: “அல்லாஹ்வே! உதவி புரிவதாக நீ அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவாயாக! இன்றே அவர்களை அழித்து விடுவாயாக!”

குறைஷிகள் பத்ர் மைதானத்தில் இறங்கியதும், அவர்களில் ஒரு கூட்டத்தினர் ஹுஸூர் (ஸல்) அவர்கள் உருவாக்கியிருந்த நீர்த்தேக்கத்தில் வந்து தண்ணீர் அருந்த ஆரம்பித்தார்கள். அவர்களில் ஹக்கீம் பின் ஹிஸாமும் ஒருவர் ஆவார். ஹக்கீம் பின் ஹிஸாம் அவர்களைத் தவிர, அந்த நாளில் அந்த நீர்த்தேக்கத்தில் இருந்து தண்ணீர் அருந்திய (மற்ற) அனைவரும் கொல்லப்பட்டனர். ஹக்கீம் பின் ஹிஸாம் அவர்கள் பின்னர் முஸ்லிம் ஆகி விட்டார்கள்.

குறைஷிகள் வருவதற்குமுன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சஹாபாவை வரிசை அமைக்கச் செய்தார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள் அம்பை வைத்து (சைகை செய்து) வரிசை அமைத்துக் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களிடம் கொடியை வழங்கினார்கள். வரிசைகளை ஆய்வு செய்து கொண்டிருந்த போது, ஹுஸூர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸவாது பின் ஃகஸிய்யா (ரலி) அவர்களைக் கடந்து சென்ற போது, அவர்கள் வரிசையில் இருந்து முன்னால் வந்திருந்தார்கள்.

ஹுஸூர் (ஸல்) அவர்கள் அவர்களின் வயிற்றில் அம்பை வைத்து, 'நேராக நிற்பீராக!' என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஸவாது (ரலி) அவர்கள், 'தாங்கள் எனக்குக் கஷ்டம் கொடுத்துள்ளீர்கள். என்னைப் பழிவாங்க விடுங்கள்' என்று கூறினார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள் தமது வயிற்றில் இருந்து துணியை அகற்றி பழிவாங்கிக் கொள்ளுங்கள்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஸவாது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கட்டி அணைத்துக் கொண்டார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய உடலை முத்தமிட ஆரம்பித்தார்கள். மேலும், கூறினார்கள்: 'எனது உடல் தங்களது அருளுக்குரிய உடலுடன் உரசியவாறு, தங்களுடனான என்னுடைய கடைசி நொடிப் பொழுதுகள் கழிய வேண்டும் என்று நான் விரும்பினேன்.'

ஹுஸூர் (ஸல்) அவர்கள் அவர்களுக்காக நன்மைக்கான துஆ செய்தார்கள். இவைதான் அன்பு நேசத்தின் அந்தக் காட்சிகள் ஆகும். மற்றவை இனி எடுத்துரைப்பேன். இன் ஷா அல்லாஹ்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இறுதியில், ஜாமிஆ அஹ்மதிய்யா ரப்வாவின் முன்னாள் ஆசிரியரும், ரப்வாவின் திருக்குர்ஆன் மனனம் செய்யும் மதரஸாவின் முன்னாள் முதல்வரும் கண்காணிப்பாளருமான **மதிப்பிற்குரிய காரீ முஹம்மது ஆஷிக் சாஹிப் அவர்கள்,** சவூதி அரேபியாவின் ஒரு சிறைச்சாலையில் (இறைவழியில்) சிறைபட்டிருந்த காலத்தில் வஃபாத் ஆன, சிரியாவைச் சேர்ந்த **மதிப்பிற்குரிய நூருத்தீன் அல்ஹுஸ்னீ சாஹிப் அவர்கள்** ஆகிய இருவரின் வஃபாத்தை ஒட்டி, மர்ஹூம்களின் வாழ்க்கை நிலைகள் மற்றும் அவர்கள் ஜமாஅத்துக்கு ஆற்றிய தொண்டுகள் பற்றி விவரமாக கூறினார்கள்.

ஜும்முஆ தொழுகைக்குப் பிறகு, அவர்கள் இருவரின் ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைப்பதாகவும் அறிவித்தார்கள்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ

اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ

يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ

يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)